முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் நெடுஞ்சாலைத் துறை சார்பில் தொடங்கி வைக்கப்பட்ட ரூபாய் 190 கோடி மதிப்பீட்டில் கோரிப்பாளையம் சந்திப்பில் 2100 மீட்டர் நீளத்தில் மேம்பாலம் கட்டப்பட்டு வரும் பணிகளை பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் ஆய்வு செய்து பார்வையிட்டனர். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் பிரவீன் குமார்,மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மு.பூமிநாதன், மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் மற்றும் அதிகாரிகள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.

எழுச்சியோடு நடந்த காவலர் நாள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!

இலண்டன், செப்.7-

காவலர் நாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

1859-ஆம் ஆண்டு மதராஸ் மாவட்டக் காவல் சட்டம் நிறைவேற்றப்பட்ட நாளான செப். 6, காவலர் நாள் கொண்டாடப்படும் என இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் சட்டப்பேரவையில் அறிவித்திருந்தேன்.

அதன்படி, பதக்கங்கள் வழங்குதல், இரத்த தான முகாம்கள் எனத் தமிழ்நாடெங்கும் எழுச்சியோடு நடந்தேறியது காவலர் நாள்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

தி.மு.க. இளைஞர் அணி

சென்னை வடக்கு மாவட்டத்துக்கு உட்பட்ட பெரம்பூர், ஆர்.கே.நகர் மற்றும் இராயபுரம் தொகுதி நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம்!

மாவட்டம்–மாநகரம்–ஒன்றியம்–நகரம்–பகுதி–பேரூர் ஆகிய கழக அமைப்புகளில் இளைஞர் அணிக்கு ஏற்கெனவே நிர்வாகிகள் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், கழகத்தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், தலைமைக்கழக ஒப்புதலுடன் தற்போது ஒன்றியத்துக்கு உட்பட்ட கிளைகளிலும் நகர–பகுதி–பேரூர் வட்டங்களிலும் மற்றும் அனைத்து பாகங்களிலும் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர்.

அந்த வகையில், சென்னை வடக்கு மாவட்டத்துக்கு உட்பட்ட பெரம்பூர், ஆர்.கே.நகர் மற்றும் இராயபுரம் சட்டமன்றத் தொகுதிகளில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பகுதி, வட்ட, பாக இளைஞர் அணி நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில், 07.09.2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில், அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் நடைபெறவுள்ளது. பெரம்பூர், ஆர்.கே.நகர் மற்றும் இராயபுரம் சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அன்பகம்
தேனாம்பேட்டை,
சென்னை-18.
நாள் : 06-09-2025

கலைஞர் 100 1924 - 2023

சென்னையிலிருந்து மதுரை – தூத்துக்குடி – திருச்சி செல்ல

ஏ.டி.ஆர்.விமானங்களில் பயணிக்கும் பயணிகளுக்கு ஏர் பஸ் விட வேண்டும்!

ஒன்றிய விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சருக்கு – அமைச்சர் மா.சுப்பிரமணியன் கடிதம்!

சென்னை, செப்.7-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (06.09.2025) ஒன்றிய விமானப் போக்குவரத்து துறை அமைச்சர் கிஞ்சரப்பு ராம்மோகன் நாயுடு அவர்களுக்கு எழுதியுள்ள நேர்முக கடிதம் வருமாறு:-

சமீப காலமாக சென்னை விமான நிலையத்திலிருந்து மதுரைக்கு வானூர்தியில் பயணம் செய்ய செல்பவர்களுக்கு பெரிய அளவிலான மனஉளைச்சல் ஏற்படுகிறது. அதற்கான காரனத்தை ஒவ்வொரு பயணியும் அறிந்தே உள்ளனர்.

சென்னை விமான நிலையத்தில் நிறுத்தப்படும் மதுரைக்கு செல்லும் ATR விமானங்களுக்கு செல்ல நெடுந் தூரம் பல கி.மீ. தொலைவு பேருந்தில் பயணிக்க வேண்டியுள்ளது. விமானத்தில் ஆகாய வழியே மதுரைக்கு பயணமாகும் நேரம் பேருந்தில் பயணிக்க ஆகிறதே என்கிற சலிப்பு ஒவ்வொரு பயணிக்கும் ஏற்படுகிறது.

இப்பேருந்துகளில் இருக்கைகள் குறைவாகவே உள்ளதால் வயது மூத்தோரும் குழந்தைகளும் கூட நின்று கொண்டே பயணிக்க வேண்டிய சங்கடமும் உள்ளது.சென்னை விமான நிலைய 1301 ஏக்கர் நிலப்பரப்பின் சுற்றுச்சுவர் ஒட்டியுள்ள ஒட்டு மொத்த பாதையையும் கடந்து கடைக்கோடியில் இவ்விமானங்கள் நிறுத்தப்படு வதற்கான காரணம் 'parking charges' குறைவு என்பதாக சொல்லப்படுகிறது.

இதனால் பயணிகளுக்கு எந்தப் பயனும் இல்லை என்பதும் 'கட்டணம்' கட்டுக்குள் இல்லாதிருப்பது என்பதும் அனைவரும் அறிந்த ஒன்றே. அதுமட்டுமல்லாமல் சென்னையிலிருந்து மதுரை, தூத்துக்குடி மற்றும் திருச்சி ஆகிய ஊர்களுக்கு செல்ல ATR விமானங்களே இயக்கப்படுகிறது. அதிக அளவில் மக்கள் பயணிக்கும் இந்த Route களில் AIR BUS விடுவதே சரியாக இருக்கும்.

எனவே மேற்கண்ட இப்பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வு காண வேண்டுமென மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

உலகளவில் தொழில் புரிவதற்கு உகந்த மாநிலம்!

முதல்வரின் முயற்சியால் முதலீட்டாளர்களின் முதல் முகவரியாகத் திகழும் தமிழ்நாடு!

"தினகரன்" நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, செப். 7 -

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தீவிர முயற்சியில் உலகளவில் தொழில்புரிவதற்கு உகந்த மாநிலமாகவும் முதலீட்டாளர்கள் முதல் முகவரியாகவும் தமிழ்நாடு விளங்கி வருகிறது என "தினகரன்" நாளேடு தலையங்கத்தில் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

அது வருமாறு :-

தினகரன்
செப்.டம்பர் 6, 2025 சனிக்கிழமை
முதலீட்டாளர்கள் முகவரி
2030 ம் ஆண்டிற்குள் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரத்தை அடைய வேண்டும் என்ற இலக்கை நிர்ணயித்து தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அதிவேக பாய்ச்சலில் பயணித்து வருகின்றார். உள்நாட்டு தொழில்துறை உற்பத்தியை அதிகரிக்க செய்யும் அதே வேளையில் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதிலும் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்.
தொழில் மயமாக்கலில் இந்தியாவிலேயே முன்னணி மாநிலமாக தமிழ்நாடு இருந்து வருகிறது. வாய்ப்புகள் மற்றும் வளர்ச்சியானது அனைத்து பகுதிகளிலும் அனைத்து தரப்பு மக்களையும் சென்றடைய வேண்டும் என்றும் அவர்

2030 ம் ஆண்டிற்குள் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரத்தை அடைய வேண்டும் என்ற இலக்கை நிர்ணயித்து தமிழ் நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அதிவேக பாய்ச்சலில் பயணித்து வருகின்றார். உள்நாட்டு தொழில்துறை உற்பத்தியை அதிகரிக்க செய்யும் அதே வேளையில் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதிலும் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்.

தொழில் மயமாக்கலில் இந்தியாவிலேயே முன்னணி மாநிலமாக தமிழ்நாடு இருந்து வருகிறது. வாய்ப்புகள் மற்றும் வளர்ச்சியானது அனைத்து பகுதிகளிலும் அனைத்து தரப்பு மக்களையும் சென்றடைய வேண்டும் என்ற தத்துவத்தை அடிப்படையாக கொண்டு கொள்கை திட்டங்கள் வகுக்கப்பட்டு தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகின்றது. இதன் காரணமாக தொழில்துறையில் மாபெரும் புரட்சி ஏற்பட்டுள்ளது. கடந்த 4 ஆண்டுகளில் ஏற்றுமதியானது இரு மடங்காக அதிகரித்துள்ளது.

இந்தியாவின் உற்பத்தி துறை சார்ந்த மொத்த உள் நாட்டு உற்பத்தியில் தமிழ் நாட்டின் பங்களிப்பு 11.90 விழுக்காடாக இருந்து வருகின்றது. மோட்டார் வாகன உற்பத்தி, ஆயத்த ஆடைகள் மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தியில் முதலிடத்தையும், ஜவுளி, இயந்திரங்கள் மற்றும் மின்னணு பொருட்கள் உற்பத்தியில் இரண்டாவது இடத்தையும் பெற்றுள்ளது. தமிழ்நாடு திறன்மிக்க பணியாளர்களை பெற்றிருப்பதால் பல வெளிநாட்டு நிறுவனங்களும் தமிழ் நாட்டை நோக்கி வருவதற்கு முக்கிய காரணமாக அமைந்திருக்கிறது.

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த சில மாதங்களுக்கு முன்பு அமெரிக்கா சுற்றுப் பயணம் மேற்கொண்ட போது 25 முன்னணி நிறுவனங்களுடன் மேற்கொண்ட சந்திப்பின் மூலம் ரூ.7,618 கோடி மதிப்பிலான 19 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டார். இதன் மூலம் தமிழ்நாட்டில் 11,516 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் நிலை ஏற்பட்டது. இந்த சூழலில் தமிழ் நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தற்போது இங்கிலாந்து மற்றும் ஜெர்மனி நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டதன் மூலமாக தமிழ்நாட்டிற்கு ரூ.13,016 கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளது.

டிஎன் ரெயிசிங் ஐரோப்பா முதலீட்டு சந்திப்புகளின் போது, இந்துஜா குழுமம் தமிழ்நாடு அரசுடன் மின்சார வாகனம், பேட்டரி தொழில்நுட்பம் மற்றும் உதிரி பாகங்கள் உற்பத்தியில் மட்டும் ரூ.5,000 கோடிக்கு முதலீடு செய்திட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இதன் மூலம் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு 1,000 பேருக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும். இந்துஜா குழுமத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தமானது தமிழ் நாட்டில் மின்சார வாகன சுற்றுச்சூழல் அமைப்புகளை நிறுவிட இக்குழுமம் திட்டமிட்டுள்ளது. இதன் மூலம் நிலையான இயக்கம் மற்றும் பேட்டரி தொழில்நுட்பங்களுக்கான உலகளாவிய தலைநகராக தமிழ்நாடு உருவாக உள்ளது.

இதே போல கடந்த 2 ஆண்டுகளில் 3வது தொழில் முதலீட்டை அஸ்ட்ராஜெனகா நிறுவனம் அறிவித்துள்ளது. சென்னையில் உள்ள அதன் உலகளாவிய கண்டுபிடிப்பு மற்றும் தொழில் நுட்ப மையத்தை (ஜி.ஐ.டி.சி.) ரூ.176 கோடி முதலீட்டில் வரிவாக்கம் செய்திட தமிழக அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்கான முதலமைச்சரின் இங்கிலாந்து மற்றும் ஜெர்மனி நாடுகளுக்கான பயணத்தால் தமிழ்நாட்டிற்கு என மொத்தம் ரூ.13,016 கோடிக்கு முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் 17,813 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு முதல்வரின் தீவிர முயற்சியால் உலகில் உள்ள முன்னணி நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தங்களது தொழில் முதலீடுகளை செய்து வருகின்றன. இதன் மூலம் உலக அளவில் தொழில் புரிவதற்கு உகந்த மாநிலமாக மட்டுமல்லாது, முதலீட்டாளர்களின் முதல் முகவரியாகவும் தமிழ்நாடு விளங்கி வருகின்றது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாதவரம் வடக்கு பகுதி, பொன்னேரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 15வது வட்டத்தில் வரும் 9ஆம் தேதி இடையஞ்சாவடியில் தமிழ்நாடு முதலமைச்சரின் சீரிய திட்டமான உங்களுடன் ஸ்டாலின் திட்டம் நடைபெற உள்ளது. இம்முகாமில் பொதுமக்கள் கலந்துகொண்டு பயன்பெற மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் தலைமையில், துரை சந்திரசேகர் எம்.எல்.ஏ., மணலி மண்டல அலுவலர் தேவேந்திரன், கவுன்சிலர் நந்தினி சண்முகம் ஆகியோர் வீடு வீடாக அழைப்பிதழ்களை வழங்கினர். வட்டச் செயலாளர் கே.அங்குசாமி ஆகியோர் முன்னிலையில் மாநகராட்சி அலுவலர்கள் வட்ட நிர்வாகிகள் எஸ். கோபாலகிருஷ்ணன், பி.டி.ரவிச்சந்திரன், எல்லமுத்து, வழக்கறிஞர் சண்முகம், கண்ணன், ஏ.விஜயன், எலந்தனூர் வி.சிவ பிரகாஷ் மற்றும் திரளான பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.

அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் - மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. சிறப்புரை!

இலத்தூர் வடக்கு ஒன்றியக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் கே.எஸ்.ஆர். கார்த்திகேயன் அறிக்கை!

காஞ்சிபுரம், செப்.7

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், இலத்தூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் கே.எஸ்.ஆர்.கார்த்திகேயன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், இலத்தூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. பொதுஉறுப்பினர்கள் கூட்டம் இன்று (7.9.2025ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணிக்கு சுபம் கண்வென்சன் சென்டரில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு ஒன்றிய அவைத் தலைவர் பி.லோகநாதன் தலைமை வகிக்கிறார். நான் (ஒன்றிய பொறுப்பாளர் கே.எஸ்.ஆர்.கார்த்திகேயன்) அனைவரையும் வரவேற்புப் பேசுகிறேன்.

கா.ஏமநாதன், சி.ஆர்.பாஸ்கரன், ராணி பாண்டுரங்கன், ஜி.வெங்கடேசன், இ.சுந்தரவடிவழகன், வி.தேவராஜன், வெளிக்காடு டாக்டர் வே.ஏழுமலை, எஸ்.கே.ராஜேந்திரன், சாந்தி இராமச்சந்திரன், சித்ரா இராஜேந்திரன், ஆர்.ரங்கநாதன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக் கூட்டத்தில் மண்டல பொறுப்பாளர் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. ஆகியோர் ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் சிறுவேடல் க.செல்வம் எம்.பி, ப.அப்துல்மாலிக், எஸ்.டி.இசை, இரா.இராமமூர்த்தி, மு.சுரேஷ் குமார், இரா.குப்புசாமி, பி.யூமாயின், ஆர்.பன்னீர்செல்வம், ஆர்.ராஜவேலு, வி.கந்தசாமி, அ.ரங்கநாதன், ஜி.எஸ்.சுரேஷ், ஆர்.வேலு, ஜெ.முல்லைவாணன், ஜெயலட்சுமி மகேந்திரன், எம்.சினுவாசன், வி.செல்வகுமார், மோகனா கோபிநாத், பிரமிளா கருணாநிதி, சுமதி பரசுரான், குமாரிநாகராஜ், அனிதா பலராமன், அரங்கநாதன், கோ.பாலு, மலர் ஜெயவேல், செ.பகவன் தாஸ்., பரிமளா தங்கராஜ், ஆதிலட்சுமி ஞானவேல், எஸ்.பரந்தாமன், என்.முருகன், அ.சு.மோகன்ராஜ், எம்.பழனி, இ.மாதவன், ஏ.மகாலிங்கம், சின்னதம்பி, கே.எம்.செல்வராஜ், சி.செல்வராஜ், கே.எம். மகாதேவன், எஸ்.கதிரவன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

நெல்வாய்பாளையம் டி.சிவக்குமார் நன்றி கூறுகிறார்.

இவ்வாறு ஒன்றிய பொறுப்பாளர் கே.எஸ்.ஆர்.கார்த்திகேயன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர்

மேலவெள்ளூர் ஏ.ஆர்.கே.தேவதாஸ் இல்லத் திருமணம்!

அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் நடைபெறுகிறது!

சிவகங்கை. செப். 7 –

சிவகங்கை மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் ஏ.ஆர்.கே. தேவதாஸ் – தே. விசாலாட்சி ஆகியோரின் புதல்வர் ஆர்.கே.டி.செண்பகராஜ்–க்கும் திருப்புவனம் ஒன்றிய கவுன்சிலர் அ.ஈஸ்வரன் – ஈ.ஈஸ்வரி ஆகியோரின் புதல்வி ஏ.இ.தர்ஷணாவுக்கும் திருமணம் இன்று (07.09.2025 – ஞாயிற்றுக்கிழமை) காலை 10.45 மணியளவில் சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வேலம்மாள் மெட்ரிக் பள்ளி அருகில் உள்ள வேலம்மாள் அரங்கத்தில் நடைபெறுகிறது.

இம்மணவிழாவில் மாவட்ட துணைச் செயலாளர் த. சேங்கைமாறன் வரவேற்புரையாற்றுகிறார்.

இம்மணவிழாவினை மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தலைமையேற்று நடத்திவைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், ஆ. தமிழரசி ரவிக்குமார், கார்த்திக் ப.சிதம்பரம் எம்.பி., முரசொலி செய்தியாசிரியர் கு.சேது, எஸ். மாரியப்பன் கென்னடி, எஸ். கார்த்திகேய சிவசேனாபதி, வசந்தி சேங்கைமாறன், ஏ.பி.ஆர். ரகுபதி, எஸ்.மோகன்குமார், பொன்.மு.சேது ராமலிங்கம், ஜி.காந்தையா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இம்மணவிழாவில் அ.கணேசன், ஜோன்ஸ் ரூசோ, மேயர் சே.முத்து துரை, நா. குணசேகரன், பா.சின்னையா, நாகனி பா. செந்தில்குமார், கே. இராமகிருஷ்ணன், சி.பூரண சங்சீதா, வி.குமரேசன், வி.பிரபாவதி, எல்.பாலசுப்பிரமணியம், கே.கே.பாலதண்டாயுதம், எஸ். சிவதேவ்குமார், என். தம்பிபாலன், ஆர். ராமநாதன், என். சிவக்குமார், என். பனையப்பன், கே.சுப்பிரமணியன், தா.இராமையா, குரு.சிங்காரவேலன், ஏ.ஆர்.ஜெயமூர்த்தி, தெய்வாணை இளமாறன், தமிழ் பிரியா வேங்கை பிரபாகரன், பொன்.மணிமாறன், எஸ்.பி.சரவணன், சரவணா புவனேஸ்வரி, கே.ஜெயவேல், கார்மேகம் செல்வி, அ. மணிமுத்து, கே.கூர்ய கலாநிதி, பா.பாலரவிராஜன், எம்.பாண்டித்துரை, பி.கார்த்தி உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்று வாழ்த்துகின்றனர்.

எஸ்.மகேந்திரன், பொன். இளங்கோவன், எஸ்.சுப்பையா ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி பல்லாவரம் வடக்கு தெற்கு மற்றும் செம்பாக்கம் வடக்கு பகுதி திமுக சார்பாக செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் குரோம்பேட்டையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது இக்கூட்டத்தில் மாவட்ட கழகத் துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ. கலந்துகொண்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வருகை உள்ளிட்ட கழக வளர்ச்சி குறித்து சிறப்புரை ஆற்றினார். அப்பொழுது பகுதி கழகச் செயலாளர் மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை, பகுதி கழகச் செயலாளர்கள் இ,எஸ்.பெர்னார்ட், ஏ.கே.கருணாகரன், பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், அணிகளின் நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.